2016 பிப்ரவரி 17]

59—

மாணவியர் விடுதி

***54792—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சியிலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காக, தமிழன் தன்மானத்தோடு வாழவேண்டும் என்பதற்காக, உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற ஒரே ஜீவநாடியாய், தாய்மையின் உறைவிடமாய், தளும்பாத நிறைகுடமாய், தன்னலம் அறியாத தமிழினத்தின் வரைபடமாய், கதி என்று வந்தோர்க்குக் கருணைக் கடலாய், கன்னித் தமிழ் காத்திட்ட கார்முகிலாய், அஞ்சாத சிங்கமாய், ஆர்ப்பரிக்கும் அன்னையாய், எழுச்சி சகாப்தம் படைக்கும் எங்கள் அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும்*

ஒலி) கனிவும், கம்பீரமும் கலந்துதித்த எங்கள் காவியத் தாயே! தனக்கென வாழாமல் தமிழக மக்களுக்காக வாழ்ந்துவரும் தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவி, அம்மா அவர்களே! தமிழகத்தைக் காத்திட, தமிழக மக்கள் வாழ்ந்திட, தாயுருவில் அவதரித்த தமிழர் குலச் சாமியே! வீணர்களின் சதித் திட்டங்களை முறியடித்து, வெற்றிகள் பல குவித்து புதிய வரலாறு படைத்திட்ட வீரத் தாயே! தமிழக மக்களின் விடியலாய், விதையாய், விருட்சமாய், வெற்றியாய் வந்துதித்த எங்களின் வீரத் திருமகளே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சியிலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவியர் பயின்று வருகின்றனர். மேலும், வாணியம்பாடியிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஆலங்காயம் பேரூராட்சிப் பகுதியைச் சுற்றிலும் 15–க்கும் மேற்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் படிக்கும் 5,000–க்கும் மேற்பட்ட மாணவியரின் நலன் கருதி, பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதியில் விடுதியில் தங்கிப் பயில விரும்பும் மாணவியரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், இனி வருங்காலங்களில் புதிய விடுதிகள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி கட்டுவது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயம் பேரூராட்சிப் பகுதியைப் பொறுத்தவரையிலே, மலைப் பகுதியாகவும், அதிகமான விவசாயப் பெருங்குடி மக்கள் வசிக்கின்ற பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவியர் மிக நீண்ட தூரம் பயணம் செய்து பள்ளிக்கு வர வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், அந்த மேல்நிலைப் பள்ளியிலே மாணவியர் விடுதி அமைத்துத் தந்தால், அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஆலங்காயம் பேரூராட்சியிலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவியர் விடுதி அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

60—

நடமாடும் மருத்துவக் குழு

***28385 திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி நான்கு வழிச் சாலைப் பகுதியில் நடமாடும் மருத்துவக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11—20

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு